2022 மே 4]

தங்கக் கட்டிகளாக மாற்றுவதற்காக ஒன்றிய அரசின் தங்க உருக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டங்கள்

அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம்

59. திருக்கோயில்களில் சமூக நீதியை நிலைநாட்ட மற்றும் இறைவனுக்காற்றும் சேவையில் அனைவருக்கும் சம வாய்ப்பினை உறுதி செய்ய 2006 ஆம் ஆண்டில் அரசால் தீர்மானிக்கப்பட்டது. திருக்கோயில்களில் இறைவனுக்குப் பூஜை செய்யும் வாய்ப்பு சாதி பாகுபாட்டின் அடிப்படையில் மறுக்கப்படக் கூடாது.

59.1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 14-8-2021-ம் தேதி 56 நபர்களுக்குப் பணி ஆணை வழங்கினார்கள். அவர்களில் 24 பயனாளிகள் 6 திருக்கோயில்களால் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற இதர சாதியைச் சேர்ந்த நபர்கள் ஆவார்கள். மேற்சொல்லப்பட்ட 6 பயிற்சிப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:—

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
2. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
5. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்.
6. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி.

59.2. மேலும் ஒரு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயிலில் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'கலைஞர் தலமரக்கன்றுகள்' நடும் திட்டம்

60. தொன்றுதொட்டு மரங்கள் இறைவன்/இறைவியைக் குறிக்கும் சின்னங்களாகவும், பல்வேறு பூஜைகளின் அங்கமாக